## வல்வைப் பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் கட்டிடம் சேதம், பலருக்கு காயம்

**14.8.84**

பொலிஸ் கமாண்டோக்கள், இராணுவப் படையினர் ஆகியோரை உள்ளடக்கிய வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தின் மீது அதிகாலை 4—30 மணியளவில் எமது கெரில்லா வீரர்கள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்புக்காகப் பொருத்தப்பட்டிருந்த செக்யூரிட்டி லைட் சுட்டு நொறுக்கப்பட்டு, பொலிஸ் நிலையத்தின் மூன்று புறங்களிலிருந்தும் கைக்குண்டுகள் சகிதம் தாக்குதல் நடைபெற்றது. சுமார் ஒரு மணி நேரம் பொலிஸ் நிலையத்தின் அரச கூலிப் படையினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் போரில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் பல அரச படைக் கூலிகள் படுகாயமுற்றனர். எமது வீரர்கள் ஒரு மணி நேரத்திற்குப்பின் தமது தரப்பில் எந்த விதச் சேதமும் இல்லாத நிலையில் தாக்குதலை நிறுத்திக் கொண்டனர். ●